RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s159

# அறப்பளீச்சுர சதகத்தில் புலனாகும் நாட்டுப்புற நம்பிக்கைகள்

அ. முருகலெட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்-626203, தமிழ்நாடு, இந்தியா

# A Study of Folk Beliefs in Arappalichura Sadhagam

A. Murugalakshmi [a, *]

[a] Department of Tamil, Sri S. Ramasamynaidu Memorial College, Sattur-626203, Tamil Nadu, India

* Corresponding Author: Praganyasakthikm@gmail.com

Received: 07-06-2022
Revised: 30-09-2022
Accepted: 08-10-2022
Published: 09-12-2022

Check for updates

**ABSTRACT**

The best forms of literature in the Tamil language have their origins in the Sitrilakkiyam period. There are 96 categories in Sitrilakkiyam in which it is mentioned in Sathuragarathi, written by Veeramamunivar. In that way, Sathaga literature emerged at the end of the Sitrilakkiyam period. It is multifaceted and lyrical. It contains many subtle thoughts to be adopted in human life. Arapazhichura sadhagam, composed by Ambalavanakkavirayar, is very special in the line of sathaga literature. It is intertwined with human life and inspires people to live their lives. The aim of the article is to match the beliefs of that day with the beliefs that can be found in the folk literature that is revered as oral literature.

**Keywords:** Satakam, Beliefs, Madavela, Bauman, Tavayogi, Monk, Adivaram, Vannan

## முன்னுரை

சதகம் என்ற வடமொழிச் சொல்லுக்கு “நூறு கொண்டது” என்பது பொருள் நூறு எண்ணிக்கை அளவுள்ள பாடல்களைக் கொண்டு அமையும் இலக்கியத்தையும் சதகம் என்ற வடமொழிப் பெயராலேயே அழைத்தனர். கி.பி. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைத்தியநாத தேசிகரே தமது இலக்கண விளக்கப்பாட்டியலில் முதன் முதலாகச் சதகத்தின் இலக்கணத்தைக் கூறியுள்ளார் “விளையும் ஒரு பொருள் மேலொரு நூறு தழைய உரைத்தல் சதகம் என்ப” என்ற நூற்பா சதக இலக்கணத்தைக் கூறுகிறது (Vaithiyanatha Desigar, 1972). அகப்பொருள் பற்றியோ அல்லது புறப்பொருள் பற்றியோ நூறு செய்யுள்களில் உரைப்பது சதகம் ஆகும் என்பது மேல் நூற்பாவின் பொருள் ஆகும் “பயிலும் ஓர் பாட்டாய் நூறு உரைப்பது தான் சதகம்” என்று எனும் பாட்டியல் நூற்பாவும் மேற்கண்ட கருத்தையே உறுதி செய்கின்றது. நூற்பாக்களை உற்றுநோக்கும்போது பாடல்களின் பொருளை விட எண்ணிக்கைக்கு மட்டுமே முக்கியத்துவம் தரப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சதக இலக்கியங்களின் வரிசையில் பார்க்கும்போது அறப்பளீச்சர சதகம் மிகவும் சிறப்பு வாய்ந்தது.

## அறப்பளீச்சுர சதகம்

அம்பலவாணக்கவிராயரால் இயற்றப்பட்ட அறப்பளீச்சுர சதகம் சதுரகிரி என்னும் ஊரிலே எழுந்தருளியிருக்கும் அறப்பளீச்சுரரை முன்னிலைப்படுத்திப் பாடப்பட்ட நூலாகும். சதுரகிரி என்பது கொல்லிமலையைச்சார்ந்த மலைப்பகுதி. அறப்பளி என்பது ஒரு சிவத்தலம். அறப்பள்ளி என்பது கோயிலின் பெயராகும். இந்நூலாசிரியர் மதவேள் என்னும் வேளாண் செல்வர் ஒருவருடைய

வேண்டுகோளுக்கு இணங்கி இச்சதகத்தை இயற்றினார் என்பது அவரைக்குறித்து ஆங்காங்கு வரும் சொற்றொடர்களால் இனிது புலப்படக்கூடியதாக உள்ளது. இச்சதக நூலில் நம்பிக்கைகள் தொடர்பான செய்திகள் அதிகம் இடம் பெற்றுள்ளன.

## நம்பிக்கைகள்

நம்பிக்கை என்பது ஒன்றின் உண்மையை ஏற்றுக் கொள்வதாகும் நம்பிக்கைகளின் அடிப்படை மனிதனின் அகமனம் ஆகும். நம்முடைய அகமனமானது காரணகாரியங்களுக்கு அப்பாற்பட்ட எண்ணங்களை மூளைக்கு உணர்த்துகிறது. மூளையில் பதியும் அவ்வெண்ணங்கள் உண்மையாகி உறுதிப்படுத்தும் போது அது நம்பிக்கையாகிறது. மனித வாழ்வின் உறுதிப்பாட்டிற்கு ஆதரவு தரும் இந்நம்பிக்கைகள் மனித வாழ்வில் மிக இன்றியமையாததாக மாறுகிறது.

## காலந்தோறும் நம்பிக்கைகள்

தொல்காப்பியர் காலத்தில் பறவைச் சகுனம் பற்றிய நம்பிக்கைகள் இருந்திருக்கின்றன (Tamizhannal, 2009). கூகை அலறினால் சாவு வரும் என்ற நம்பிக்கை புறநானூற்றுக் காலத்தில் இருந்ததையும் அறிய முடிகிறது (Swaminathar, 2014). காகம் கரைந்தால் விருந்தினர் வருவார் என்று குறுந்தொகைத் தலைவி நம்பியிருக்கிறாள் (Swaminathar, 1984). தும்மல் வந்தால் வேண்டியவர்கள் நினைப்பர் என்பதை நம்பித் திருக்குறள் தலைவி தலைவனோடு ஊடல் கொள்கிறாள். இவ்வாறாக நம்பிக்கைகள் பல காலங்களிலும் பலராலும் பின்பற்றப்படுகிறது (Parimelalhagar, 2002).

## நம்பிக்கைகளின் பரிணாமங்கள்

1. சகுணம் பற்றிய நம்பிக்கைகள்
2. கண்ணேறு பற்றிய நம்பிக்கைகள்
3. சோதிடம் பற்றிய நம்பிக்கைகள்
4. நாள் பற்றிய நம்பிக்கைகள்

இவ்வாறாக நம்பிக்கைகள் பல பரிணாமங்களில் பிரதிபலிக்கின்றன. இவற்றுள் அறப்பளீச்சுர சதகத்தில் நாள் பற்றிய நம்பிக்கைகள் அதிகம் இடம் பெறுகின்றன. அதனைத் தகுந்த சான்றுகளுடன் பார்ப்போம்.

## நாள் பற்றிய நம்பிக்கைகள்

பிறப்பு முதல் இறப்பு வரை மனிதனின் ஒவ்வொரு நாள் வாழ்விலும் ஒவ்வொரு சிறு செயலிலும் கூட எத்தனையோ நம்பிக்கைகள் சகுனங்கள் சாத்திரங்கள் மனிதனை ஆட்டிப் படைக்கின்றன. கல்வியறிவு மிகுந்தவர்களும் மிகப் பெரிய பணக்காரர்களும் அதிகாரிகளும் சில சமயம் இவற்றை அலட்சியப்படுத்துகிறார்கள். பின்னர் அவர்களுக்கு ஏதாவது தொல்லைகள் ஏற்படும்போது அவர்களும் பாமர மக்களைப் போல இந்த நம்பிக்கைகளுக்கும் சகுனங்களுக்கும் அடிமையாகிவிடுகின்றனர். நம் வாழ்வில் அதிகம் பின்பற்றக் கூடியவை நாள் பற்றிய நம்பிக்கைகள் அவற்றில் ஒரு சிலவற்றை நாம் இங்குக் காண்போம்.

## எண்ணெய் தேய்த்து நீராடத்தக்க நாள்கள் குறித்த நம்பிக்கைகள்

நாள் பற்றிய நம்பிக்கைகளில் தலைக்கு எண்ணெய் தேய்த்து நீராடும் நாள்கள் பற்றி அறப்பளீச்சுர சதகத்தில் சில கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. அவை திங்கள் நீராடினால் பொருட்சேரும், செவ்வாய் துன்பம் வரும், புதன் அறிவு வரும், வியாழன் அறிவு கெடும், வெள்ளி குளித்தால் சேமித்து வைத்த பொருள் அழியும், சனி ஆயுள் பெருகும், செல்வ வளம் பெருகும். “வரும்

ஆதிவாரம் தலைக்கு எண்ணெய் ஆகாது, வடிவ மிகும் அழகு போகும், வளர் திங்களுக்கு அதிக பொருள் சேரும் அங்கார வாரம் தனக்கு இடர் வரும்," இதனை மீறி நாம் தீய பலன் உடைய நாள்களில் நீராட நேர்ந்தால் ஞாயிறு அலரி மலரும், செவ்வாய் மண்ணும், வியாழன் அறுகம்புல்லும், வெள்ளி எருப்பொடியும், சேர்த்துக் குளிக்க வேண்டும் என்ற பரிகார முறையையும் சேர்த்து விளக்குகிறது அறப்பளீச்சுர சதகம். "பரிகாரம் உளது ஆதிவாரம் தனக்கு அலரி பௌமனுக்கு ஆசை செழுமண், பச்சறுகு பொன்னவற்கு ஆம், எருத்தூளொளிப் பார்ககவற்கு ஆகும்" என்ற பாடல் வரி நமக்குப் பறைசாற்றுகிறது (Ambalavanak Kavirayar, 2017).

## புதிய ஆடை அணியும் நாட்கள் குறித்த நம்பிக்கைகள்

மனிதர்களாகிய நாம் புதிய ஆடை அணிவதற்கு ஏற்றதாக சில நாட்களை அம்பலவாணக் கவிராயர் எடுத்துரைக்கிறார். ஞாயிறு அணிந்தால் கறை படியாது தூய்மையாக இருக்கும், திங்கள் அணிந்தால் புதிய உடை அழுக்கடையும், மழையில் நனையும், துணி கிழிந்து போகும், செவ்வாய் மிகுதியான துன்பம் உண்டாகும் ஆண்மை நீங்கி விடும், புதன் அணிந்தால் சில நாட்களில் கிழிந்து விடும் வெற்றி நம்மை விட்டு நீங்கிச் செல்லும், வியாழன் அணிந்தால் அழகு பெறும் இன்னும் மிகுதியான ஆடைகள் கிடைக்கும், சனிக்கிழமை அணிந்தால் மரணம் ஏற்படும் வாழ்வு சிதையும் என்பதை "கறை படாது ஒளி சேரும் ஆதிவாரந்தனிற் கட்டலாம் புதிய சீலை கலைமதிக்கு ஆகாது பலகாலும் மழையினிற் கடிது நனைவுற்றொழி தரும் இனிய சுக்கிற்கோ வாழ்வுண்டு திருவுண்டு பொல்லாத சனியற்கு வாழ்வு போம், மரணம் உண்டாம்," எடுத்துரைக்கிறது (Ambalavanak Kavirayar, 2017).

## பயண காலம் குறித்த நம்பிக்கைகள்

பயணம் காலம் குறித்த சில கருத்துக்கள் அறப்பளீச்சுர சதகத்தில் இடம்பெற்றுள்ளன. அதனுள் குரங்கு ,பாம்பு, மூஞ்சூறு அன்றி வேறு கலைமான் கரிக்குருவி அட்டை, பூச்சி, எலி, கரடி ,காட்டுப்பன்றி, உடும்பு இவையாவும் வலப்பக்கம் இருந்து இடப்பக்கம் சென்றால் நன்மை உண்டாகும் வெற்றி கிடைக்கும் .விரைவாக பயணிப்பவர்கள் தலையில் இடித்தல் ஒரு காலில் நிற்றல் வந்து கையைப் பிடித்து ஒற்றை தும்மல் ஆணையிடுதல் இருமல் போக எனும் சொல் காதில் விழுதல் இவை எல்லாம் பயணம் செய்யும்போது நிகழ்ந்தால் நல்லது அல்ல என்ற கருத்தினை "சொல்லிய கருடன் வானரம் அரவம் மூஞ்சி ஒரு சிகரம் டிவி கலைமான் தூய பாரத் வாசம் வாசம் அட்டை ஏறி முன் கோவை மிக உரை செய்" என்று பயணம் செய்வதற்கு ஏற்ற நாட்களாக சிலவற்றை அம்பலவாணக்கவிராயர் கூறியுள்ளார் (Ambalavanak Kavirayar, 2017). நாம் பயணம் செய்யும் பொழுது தலை விரித்து போட்டு இருத்தல், ஒற்றைப் பிராமணன் எதிரே வருதல், தவயோகி, துறவி, பொற்கொல்லன் ஆகியோர் தனியே வருதல் புல் சுமந்தவன், விறகு சுமப்பவள், மொட்டை தலையன் ஆகியோர் வருதல், அணிகலன் இல்லாத பெண்கள், மண்பாண்டம் முதலானவை வருதல் தீய பலன்களைத் தருவதாக கூறுகிறது. அதே போன்று நாம் பயணம் செய்யும் போது நீர் நிறைந்த குடம், எரு, பார்ப்பான, சுமங்கலிப் பெண், பூப்படைந்த பெண்ணின் அழுக்குத்துணி, பால்குடம், மணி வளையல், மலர்கள் வந்தால் நன்மை பயக்கும் என்று அம்பலவாண கவிராயர் உரைக்கிறார். இதனை" நலம் மிகு சும்மா உங்களை கலந்து சூதக மங்கை நாளும் வண்ணான் அழுக்கு நசை பெரிது பால் கறக்கும் மணி வளையல் மலர்கள் நாடி எதிர்வர நம்மை யாம்" என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன (Ambalavanak Kavirayar, 2017).

## விருந்து உண்பதற்கு ஏற்ற நாட்கள் குறித்த நம்பிக்கைகள்

ஞாயிற்றுக்கிழமை விருந்து உண்ணக் கூடாது, விருந்து இடவும் கூடாது. அதனை மீறி செய்தால் பகைவரும், திங்கள்கிழமை உறவு நலம் தரும், நன்மைகள் உண்டாகும், செவ்வாய்க்கிழமை நலம் தராது பகை உண்டாகும். புதன்கிழமை நன்மை தரும், வியாழக்கிழமை அதிகமான பகை உண்டாகும், வெள்ளிக்கிழமை நலம்பெறும். ஆகவே இந்த நாட்களை த்தவிர்த்து நாம் விருந்து

உண்பதற்கு சிறந்த நாட்களைத் தேர்ந்தெடுத்து விருந்தினை உண்ண வேண்டும் என்பதனை இதனை" மங்கு நிகர் சனி வாரம் நல்லதா இதனினும் மனமொத்து இருந்த இடம் வலமாய் போய் விருந்து விருந்து தவ வாய்ப்பினால் என்று அறியலாம். என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன (Ambalavanak Kavirayar, 2017).

## பூப்படையும் நாட்கள் குsறித்த நம்பிக்கைகள்

ஞாயிற்றுக்கிழமை பூப்படைந்தவள் நோய் உடையவளாகவும் ,திங்கள்கிழமை கற்பு உடையவளாகவும், செவ்வாய்க்கிழமை மிகுதியான மனவருத்தம் உடையவளாகவும், புதன்கிழமை அதிகமான குழந்தைகளைப் பெற்றெடுப்பது ,வியாழக்கிழமை மக்கள் பெற்றவுடன் செல்வவளம் இருப்பவராகவும், வெள்ளிக்கிழமை எனில் இன்பமும் செல்வமும் நிலைக்கும் என்றும், சனிக்கிழமை யானால் தீய குணம்உற்றுs வறுமை அடைவாள் என்றும் பூப்படைவதற்கான நாட்கள் குறித்த பலன்களை அம்பலவாணக் கவிராயர் "அரசனுக்கு ஆதியோகி அவர் சோமனுக்கு ஆன கற்புடையவள் அதற்கு வெகு தூக்கி அவல் இந்திய அளவில் பயனுள்ளவை பெறுவாள் நிறுத்தத்தின் மிக்க சம்பத்தின் ஒருவரை பெற்றெடுப்பாள் சீருடைய பார்த்து அதிபதியும் குருவும் உண்டாகி இருப்பாள்.' என்ற பாடல் வரிகள் சிறப்புடன் விளங்குகின்றன (Ambalavanak Kavirayar, 2017).

## முடிவுரை

நம்பிக்கைகள் என்பது ஒரு மனிதன் பிறப்பது முதல் இறப்பது வரை கடைபிடிக்கக் கூடிய ஒரு மிகப்பெரிய ஆயுதம் ஆகும். இந்நம்பிக்கைகளைப் பின்பற்றுவதால் தங்கள் வாழ்வும் வளமும், நலமும் பெறும் என்று மக்கள் நம்புகின்றனர். நம்மிடமுள்ள இரு கைகளேப் போனாலும் நம்பிக்கை ஒன்று இருந்தால் இந்த உலகை வென்று விடலாம் என்ற வரிகளுக்கு ஏற்ப நம்பிக்கை குறித்த ஆய்வுகளில் பல கட்டுரைகள் இருந்தாலும், நாள் பற்றிய நம்பிக்கைகள் என்ற ஒரு சிறு பகுதி மட்டுமே இங்கு ஆய்வுக் களமாக அமைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து இன்னும் இவற்றில் பல ஆய்வுகள் வர வாய்ப்பாக இக்கட்டுரை அமைகின்றன.

## References


Ambalavanak Kavirayar, (2017) Arappalichura Sadhagam, Saradha Pathippagam, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Swaminatha Iyer, U.Ve.Sa. (2014) Purananooru Moolam Uraiyum, U.V.SA Library, Chennai, India.

Swaminathar, U.Ve.Sa. (1984) Kurunthogai Moolamum Uraium, U.V.SA Library, Chennai, India.

Tamizhannal, (2009) Tholkkapiyam, Koviloor Madalayam, Koviloor, India.

Vaithiyanatha Desigar, (1972) Ilakkana Vilakkam, Thanjai Sarswathi Mahal Veeliyeedu, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License